நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 649 /2024

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | குட்டியப்பன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 43 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.59PM

1. நான் தற்போது பெரியசோரகையில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். அ.சா1 மற்றும் அ.சா2 யை தெரியும். எதிரியை தெரியும். அ.சா1 இரண்டாவது எதிரியின் சகோதரி ஆவார். அ.சா1 அவருடைய அண்ணன் ஜீவானந்தம் என்பவரிடம் பணம் கேட்டு பிரச்சினை செய்து வந்தார். சம்பவத்து

அன்று அ.சா1 தான் எதிரிகளிடம் பிரச்சினை செய்த அவர்களை அடித்து விட்டார். இரண்டாவது எதிரியை அ.சா1 பிடித்து கடித்துவிட்டார்.

2. காவல் நிலையம் சென்று இரண்டாவது எதிரி தகவல் தெரிவித்தால் இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. நான் கம்யூனிஷ் கட்சியில் உள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரியும் கம்யூனிஷ் கட்சியில் உள்ளார் என்றால் ஆமாம். அவருடைய சகோதரியும் கம்யூனிஷ் கட்சியில் தான் உள்ளார். அ.சா1 க்கும் ஆஜர் எதிரிக்கும் சொத்து பிரச்சினை இருந்தது என்றால் இருந்தது. பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். 10.07.2021 ம் தேதி ஆஜர் எதிரி மற்றும் அவருடைய மனைவி மகன்களுடன் வீட்டில் இருந்தார் என்றும் அங்கு வந்த அ.சா1 மற்றும் அ.சா2 இருவரும் மாலை 4.30 மணி அளவில் இரண்டு தரப்பினரும் சத்தம் போட்டு பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும் எதிரி உதயபாரதி அ.சா1 யை அருவருக்கதக்க கெட்ட வார்த்தையால் திட்டி இங்கு வந்து பணம் கேட்கிறீர்களா என்று அ.சா2 ன் தலை முடி மற்றும் துப்பட்டாவை இழுத்து பெல்ட்டால் வலது பக்க கை மற்றும் முதுகில் அடித்ததை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லியிள்ளேன் என்றால் சரியல்ல.

2. அங்கு இருந்த ஹாக்கி மட்டையை எடுத்து அ.சா1 யை ஆஜர் எதிரி அடித்ததில் அவருக்கு வலது கை மோதிரவிரலில் அடிபட்டது என்றும், எதிரி நிர்மலா அ.சா1 ன் சேலையை பிடித்து இழுந்து சமையல் அறையில் இருந்த மண்ணெனெய் கேனை எடுத்து தூக்கி வீசி இவர்களை எரித்து விடுங்கடா என்று சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டி அப்போது நானும், அங்கு இருந்தவரக்ளும் சண்டையை விலக்கி விட்டதாகவும் மூன்று எதிரிகளும் ஒன்று சேர்ந்து அ.சா1 யை என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிள்ளேன் என்றால் சரியல்ல.

3. நானும் எதிரியும் ஒரே கட்சியில் இருப்பதாலும், நண்பர்கள் என்பதாலும் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.13PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 649 /2024

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்தையன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 45 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.14PM

1. நான் தற்போது பெரியசோரகையில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது

கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**1.** நான் கம்யூனிஷ் கட்சியில் உள்ளேன் ஆஜர் எதிரியும் அதே கட்சியில் தான் உள்ளார். எதிரிக்கும் அவரது சகோதரி அ.சா1க்கும் குடும்ப பிரச்சினை இருக்கிறது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அ.சா1யை அடித்ததை பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. 11.07.2021ம் தேதி காலை 8.00 மணி அளவில் நானும் சஞ்சீவி என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தபோது போலீசார் எங்கள் முன்னிலையில் படம் வரைந்து எழுதி படித்து காட்டிய பிறகு தான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் நானும் ஒரே கட்சியில் இருப்பதால் எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.22PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 649/2024**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சஞ்சீவி |
| தந்தை / கணவர் பெயர் | : | பழனிசாமி |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 5** |
| வயது | : | 37 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 08–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**1 வது எதிரி ஆஜரில் இல்லை 2 வது எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.24PM

1. நான் தற்போது நான் தற்போது நங்கவள்ளி குடியிருக்கிறேன். நான் விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இஇஇஇ

இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

**1.** நான் கம்யூனிஷ் கட்சியில் உள்ளேன் ஆஜர் எதிரியும் அதே கட்சியில் தான் உள்ளார். எதிரிக்கும் அவரது சகோதரி அ.சா1 க்கும் குடும்ப பிரச்சினை இருக்கிறது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அ.சா1 யை அடித்ததை பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. 11.07.2021 ம் தேதி காலை 8.00 மணி அளவில் நானும் சித்தையன் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தபோது போலீசார் எங்கள் முன்னிலையில் படம் வரைந்து எழுதி படித்து காட்டிய பிறகு தான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் நானும் ஒரே கட்சியில் இருப்பதால் எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—03.26 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**